**எதிரி ஆஜர்.**

**அ.சா.4, சக்திவேல், த/பெ. சாமியப்பன், எம்.பி.எண்.2/2025, தேதி 03.09.2025 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் குடியிருக்கும் இடத்திற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் 7 கி.மீ. இருக்கும். நான் டெக்சில் கூலி வேலை செய்து வருகிறேன். சம்பவ இடத்திற்கு நான் தெரிந்தவர் வீட்டிற்கு சென்றிருந்தேன். ஆனால், அவர் பெயர் எனக்கு தெரியாது. சாட்சி2 ராதாகிருஷ்ணன் எனது உறவினர் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது சுமார் 10,20 பேர் இருந்தார்கள். போலிசார் என்னை சாட்சியாக இருக்கும்படி சொல்லவில்லை. நான்தான் சாட்சியாக சென்றேன். சம்பவ இடத்திற்கு அருகில் சுமார் 4, 5 வீடுகள் உள்ளது. சம்பவ இடத்திற்கு அருகிலுள்ள போலிசார் விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்தில் ஒரே ஒரு கையொப்பம் மட்டும் போட்டேன். கையொப்பம் செய்த தாளில் என்ன சங்கதிகள் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொருட்களை எந்த இடத்தில் இருந்து எடுத்தார்கள் என்றால் லெட்டின் பக்கத்தில் இருந்து பொருட்களை போலிசார் எடுத்தார்கள். என்னுடன் கையொப்பம் செய்த மற்றொரு நபர் எங்கிருந்து வந்தார் என்று எனக்கு தெரியாது. கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தின் கடப்பாறையின் அளவு எனக்கு தெரியாது. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், அ.சா.1 ராதாகிருஷ்ணன் எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கினங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றும் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**